கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.95,52,01,000/–, மூலதனக் கணக்கில் ரூ.70,83,62,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள்இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–6–2017), வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

21. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

30. மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

31. மானியக் கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

32. மானியக் கோரிக்கை எண் 33–சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

33. மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

34. மானியக் கோரிக்கை எண் 29–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

35. மானியக் கோரிக்கை எண் 29–தொல்லியல் மற்றும் அருங்காட்சியகங்கள் (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

36. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

37. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

———

TRUTH ALONE TRIUMPHS